DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST (POA) ACT 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 16/2021**

அ.சா. 2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ராகவன் | Caste: | |
| Father's / Husband's Name: | நல்லாள் | Calling: | ஓய்வு பெற்ற TNSTC பணியாளர் |
| Village: | தோலூர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 61/2026 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 10.06.2026

( A2, A3, A6 ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. ஏனைய எதிரிகள் ஆஜர்.)

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பரமக்குடி தாலுகா, கக்கன் நகரில் வசித்து வருகிறேன். அ.சா.1 ரேணுகா என்பவரை தெரியும். அவர் எனது அண்ணன் மகள். தர்மன் மகன் ராகவன் என்பவரை தெரியும். இவ்வழக்கில் இறந்துபோன ஜெயசந்திரன் என்பவரை தெரியும். அவர் எனது அண்ணனின் மருமகன். பட்டியல் சாட்சி சேவியரை தெரியும். நாங்கள் பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். மற்ற எதிரிகளை பார்த்தால் அடையாளம் தெரியும். 1–வது எதிரி சேதுபதி தேவேந்திர குல வேளாளர். ஆஜரான மற்ற எதிரிகள் என்ன சாதியை சார்ந்தவர்கள் என்று எனக்கு தெரியாது. ஆஜராகாத எதிரிகள் எந்த சாதி என்று பார்த்தால் தான் தெரியும். நடந்த சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். சுமார் 3 – 4 வருடங்களுக்கு முன்பாக காலை 11.30

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.06.10 16:05:36 +0530

மணியளவில் பரமக்குடி பாலன் நகர் ரீச்சு கரை கூத்தபெருமாள் கோவிலுக்கு மேற்கே கருவேல செடிக்கு அருகே ஒரு நபர் இறந்து கிடப்பதாக கேள்விப்பட்டு நான் சென்று பார்த்தேன். அந்த நபர் எனது அண்ணன் மருமகன் ஜெயசந்திரன் போல் தெரிந்தது. அதனால் நான் அருகில் சென்று பார்த்தபோது, அவருக்கு நடுமூக்கு, இடது பக்க நெற்றி ஆகிய இடங்களில் இரத்தக் காயமும், நெஞ்சு வீங்கியும் இருந்தது. பின்பு இதுகுறித்து எனது அண்ணன் மகள் ரேணுகாவிற்கு தகவல் சொன்னேன். பிறகு எனது அண்ணன் ராமமூர்த்தி, எனது அண்ணி ராமாயி மற்றும் ரேணுகா ஆகியோர்கள் வந்தார்கள். பிறகு போலீசாருக்கு தகவல் கொடுத்தோம். போலீசார் வந்து பிரைவேட் ஆம்புலன்சில் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அவர் எப்படி இறந்தார் என்று நான் கேள்விப்படவில்லை. இது சம்மந்தமாக எனது அண்ணன் மகள் ரேணுகா பரமக்குடி நகர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். அதன்பேரில் வழக்கு பதிவு செய்து காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தாரா என்றால் இல்லை.

**(சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க அரசு தரப்பில் கோரியதன் பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

கடந்த 26.3.2021ம் தேதி பரமக்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார். நான் விசாரிக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் யார் என்றும் என்ன சாதியை சேர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியும் என்றும் எதிரிகளும் நானும் ஒரே ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பரமக்குடி காவல் துணை கண்காணிப்பாளர் என்னை கடந்த 26.03.2021ம்

SELVARAJAN SIVAKADATCHAM
Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.06.10 16:05:43 +0530

தேதி விசாரிக்கும்போது 25.03.2021ம் தேதி இரவு 10.30 மணியளவில் பரமக்குடி பொன்னையாபுரம் பாலத்திற்கு கீழே உள்ள கண்ணதாசன் டீக்கடை அருகே பரமக்குடி பாலன் நகரை சேர்ந்த முருகன் மகன் சேதுபதி, சேதுபதி நண்பர்களான போஸ் மகன் ராஜா, இராமநாதன் மகன் கார்த்திக், ராமமூர்த்தி மகன் முனியசாமி, குழந்தைசாமி மகன் நரேஷ், மகேஷ்வரன் மகன் ஆரவ் ஆகியோர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள், நானும் என்னுடன் வந்த இராமமூர்த்தியும் சத்தம் போட்டு விலக்கிவிட்டோம் என்றும், நானும் என் தம்பி ஜெயசந்திரனும் சரியாக பேசிக்கொள்ளாததால் என் தம்பியை அழைத்து செல்லாமல் சத்தம் போட்டு அனுப்பி வைத்துவிட்டதாக இராமமூர்த்தி கூறினார் என்றும், போலீசார் விசாரணையின் போது சொல்லிவிட்டு தற்போது எதிரிகளோடு சமாதானம் செய்து கொண்டு அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.06.10 16:05:47 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.